**செய்தி வெளியீடு எண்:167** **நாள்: 18.03.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (18.3.2017) கோயம்புத்தூர் மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பான கருத்துகளை இங்கே எடுத்துரைத்த

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புதிட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! மற்றும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே, மேடையிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு தலைமைச் செயலர் அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

காவல்துறை அதிகாரிகளே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற

முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் உள்ளாட்சி அமைப்பு சார்ந்த பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,

வணக்கத்திற்குரிய தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

எனதருமை பொதுமக்களே!

கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களைச்

சார்ந்த உழைப்பாளர் உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

- 'அம்' என்றால் தெய்வீகம், 'மா' என்றால் அளவில்லாத ... என்று பொருள். அளவிடற்கரிய தெய்வத்தன்மை பொருந்தி, உலகத் தமிழர்களின் உள்ளங்களில் சக்தியாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

- மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடன் நடைபெறும் இந்த அரசு பொறுப்பேற்ற குறுகிய காலத்திற்குள்ளேயே பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கும் பேரினை அம்மா அவர்களின் நல்லாசியோடு நான் பெற்றிருக்கிறேன்.

- கடந்த 4.3.2017 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் 1486 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7508 பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

- கடந்த 7.3.2017 அன்று காலை, சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 330 கோடியே 84 லட்சம் மதிப்பீட்டில் 3971 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

- 7.3.2017 அன்று மாலை, திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் 623 கோடியே 55 லட்சம் மதிப்பீட்டில் 2603 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.
- அதனைத் தொடர்ந்து, 8.3.2017 அன்று காலை, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் 235 கோடியே 61 லட்சம் மதிப்பீட்டில் 1098 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.
- அதே நாள் மாலை, மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் 1004 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில் 6874 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.
- இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன் கீழ் அறிவித்த திட்டங்களாகும். இத்திட்டங்கள் பல நிறைவு செய்யப்பட்டு விட்டன. மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திட்டத்திற்காக அல்ல மக்கள்**
**மக்களுக்காகவே திட்டங்கள்**

என்ற உயர்ந்த நோக்கத்துடன், துறைகள் தோறும் சாதனை நிகழ்த்தி சரித்திரம் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திக்கற்றவருக்கு தெய்வம் துணை இருப்பது போல் துயருறும் மக்களுக்கு மாண்புமிகு அம்மா துணையாக இருந்தார்கள்.

மாண்புமிகு அம்மாவைத் தொடர்ந்து ஏழைகளை முன்னேற்ற அம்மாவின் அரசு துணையாக இருக்கும்.

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன் ஆள்பவர்க்கு.**

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி நல்ல பல திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வந்தார்கள்.

**<u>எண்ணிப் பார்க்கிறோம்...</u>**

தானே புயலால் அனைத்தையும் இழந்த மக்களின் துயர் போக்க போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாற்றி அழிவின் தடயமே தெரியாத அளவிற்கு மாற்றி சாதனை படைத்தார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய பெருமக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக வரலாறு காணாத அளவிற்கு நிவாரணம் அளித்து விவசாயிகளின் வாழ்க்கையில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பசிப்பிணி போக்கும் மருத்துவராக உழைக்கும் மக்களுக்கு மலிவு விலை உணவகங்கள், ஆலயங்களில் அன்னதானம், விலையில்லா அரிசி, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் வேலைவாய்ப்புகள், ஏழை பெண்களுக்கு 8 கிராம் தாலிக்குத் தங்கம், திருமண உதவித்தொகை, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, கறவை மாடுகள், ஆடுகள், சூரியசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டம், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், உழவர் திருவிழா மற்றும் உழவர் பாதுகாப்புத்திட்டம் இப்படி எண்ணற்ற தொலைநோக்கு திட்டங்களை வழங்கி ஏழைகளின் சிரிப்பினில் இறைவனைக் கண்டார். அம்மா அறிவித்த திட்டங்களை தொடங்கி வைக்கும்போது ஏழைகள் சிரித்து மகிழ்ந்தார்கள். அந்த சிரிப்பில் மாண்புமிகு அம்மாவையே நாம் இறைவனாக பார்க்கிறோம்.

**மக்களால் நான்**
**மக்களுக்காக நான்**

என்று உலகில் முதன்முதலாக புரட்சி முழக்கமிட்டு நாள்தோறும் திட்டங்கள், நாள்தோறும் சாதனைகள் என்று தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக மாற்றி வரலாற்றில் முத்திரைப் பதித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்களின் தொடர்ச்சியாக, இந்த அரசு கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில், திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறது.

வாழ்வாதாரத்திற்கு விவசாயம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு பொருளாதாரத்திற்கு தொழில் மிகவும் முக்கியம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்கள் வேளாண்மைத் துறைக்கும், தொழிற்துறைக்கும் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து, அதிக நிதியை ஒதுக்கி, அதிக திட்டங்களை வகுத்து அவற்றையெல்லாம் விரைவாக செயல்படுத்தினார்கள்.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் இந்த கோயம்புத்தூர் நகரம், தமிழ்நாட்டில் பெரிய தொழில் நகரமாக திகழ்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஆட்டோமொபைல் மற்றும் ஜவுளித் தொழிலில் அதிகம் பேர் ஈடுபடுகிறார்கள்.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும் தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில், அதிலும் குறிப்பாக, கைத்தறி, முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித் துறையை மேம்படுத்தவும், நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் விதமாக நெசவாளர்களுக்கென 10,000 சூரிய சக்தியுடன் கூடிய, பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள், வழங்கப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்திய தார் மற்றும் இயந்திரங்கள் 25,000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நெசவாளர்கள் தொழில் முதலீடு மற்றும் நடைமுறை மூலதனக்கடன் பெறும் வகையில் நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், நெசவாளர்கள் 2 லட்சம் ரூபாய் வரை கடன் பெற இயலும். வட்டியில் 3 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, அனைத்து வீட்டு இணைப்புகளுக்கும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரத்தை 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் 500 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரத்தை 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தி ஆணையிட்டார். இதனால் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெற்று வருகின்றனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் தொழில் வளமிக்க மாவட்டங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு முதன்முறையாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி 4 கோடியே 70 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் 2 கோடியே 42 இலட்சம் ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து அவர்களின் ஆசியுடன் அடுத்த முதலீட்டாளர்கள் மாநாட்டை இந்த அரசு நடப்பாண்டில் வெற்றிகரமாக நடத்தும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த அரசு ஒற்றைச் சாளர முறையினை (Single Window System) செம்மைபடுத்தி முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனடியாக வழங்கி, உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான வழிவகை செய்து வருகிறது.

தொழில் துறையில் சிறுதொழிலின் பங்கு மிகவும் பெரியது. அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறு தொழில் புரட்சிக்கு வித்திடும் வகையில் தொழிற் பூங்காக்களை உலகத்தரத்தில் உருவாக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023–ல் சிறுதொழில் துறைக்கென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கினைத் தமிழ்நாடு எய்தும் வகையில், இலட்சியத்துடனும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் என நான் உறுதியாக கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம் எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலையில் 4.1.2013 அன்று நடைபெற்ற பொன்விழாவில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உரையில், இமை கொட்டாமல் ரசிக்கும் இயற்கை அழகையும், உடலை வருடும் இதமான தென்றலையும், வானத்தைத் தொடும் அளவு வளர்ந்திருக்கும் மரங்களையும், காற்றோடு கலந்து வீசும் ரம்யமான யூகலிப்டஸின் நறுமணத்தையும் வெகுவாக பாராட்டி மகிழ்ந்தார்கள். நீலகிரி மாவட்டத்திற்கு வரும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் புத்துணர்வு பெறுவார்கள். நீலகிரி தேயிலை தொழிலாளர்களுடன் பேசி மகிழ்வார்கள்.

தேயிலை தொழிலாளர்களின் வாழ்க்கையில் மிகவும் அக்கறை கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்கள்.தனியார் தேயிலை ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை என்பதால், தமிழ்நாடு அரசு ஒரு தனி ஏல மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 2003ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், உலகிலேயே முதன் முறையாக கணினி மயமாக்கப்பட்ட “டீ சர்வ்” , என்ற புதிய தேயிலை மையம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ஏல மையம், கடந்த 10 ஆண்டுகளாகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 லட்சம் ரூபாயில் இருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் எனவும், பயிர்ச் சேதம்,

உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. வனப்பகுதிகளில் வறட்சி காலங்களில் வனஉயிரினங்களுக்கு தேவையான நீரினை வழங்குவதற்கு தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை முதன்முதலில் கொண்டுவந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

திருப்பூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டப்பணிகளை நிறைவேற்றியிருந்தாலும், குறிப்பாக, அம்மாவின் செயற்கரிய செயல் ஒன்றை மட்டும் நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

திருப்பூர் பின்னலாடை தொழிலின் ஏற்றுமதியில் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக விளங்குகிறது. அங்கு நடைபெறும் பின்னலாடை தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு திருப்பூரில் சாயப்பட்டறை கழிவுநீர் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தனது தேர்தல் அறிக்கையில் திருப்பூர் விளைநிலங்களுக்கும், நீர்நிலைகளுக்கும் மாசு ஏற்படுத்தி வந்த சாயப்பட்டறை கழிவுநீர் பிரச்னைக்கு விரைவாக தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்திருந்தார்கள். திருப்பூர் சாயப்பட்டறைகள் உரிமையாளர்கள் சங்கம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிதிச்சுமையைக் குறைக்கவும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறக்கவும் அரசின் உதவியினைக் கோரின. இக்கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பங்காக 112 கோடியே 50 லட்சம் ரூபாயை மானியமாக வழங்கி 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியது. சாயப்பட்டறை கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை கொண்டு வரும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பல ஆண்டுகளாக நிலவி வந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் மதிநுட்பத்தால் திருப்பூர் ஜவுளித் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் புதிய வாழ்க்கை கிடைத்தது என்பதை நீங்கள் யாரும் மறக்க முடியாது.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நடைபெற்று வரும் பூஜ்யநிலை கழிவு நீர் பணியானது பல்வேறு நிலைகளில் உள்ளது. இப்பணிகள் செப்டம்பர் 2017–க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்பூர் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் பொருட்டு பேருந்து நிலையம் அருகில் அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சி (வழி) மீன்கரை சாலை மேம்பாலம் அமைக்கும் பணி 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் நவம்பர் 2017–க்குள் நிறைவடையும்.

மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் தொடர்ச்சியே இந்த அரசு. அம்மா எண்ணிய, விரும்பிய திட்டங்களை செயல்படுத்துவதையே பெரும்பணியாகவும், பெருமையாகவும் நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு அம்மாவின் திட்டங்கள் அனைத்துமே இனியும் தொடரும் என கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

பவானி மற்றும் அதன் கிளை நதிகளில் கேரள அரசு தடுப்பணைகள் கட்ட முயற்சிப்பதை தடுத்து நிறுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் 01.02.2017 அன்று ஒரு இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளது. நான் 27.2.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுவில், கேரள அரசு பாம்பாறு மற்றும் பவானி ஆறுகளின் குறுக்கே மேற்கொண்டு வரும் அணை கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டியும் மற்றும் காவிரி மேலாண்மை வாரியம் நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் வழக்குகள் இறுதியாக்கம் பெறும் வரையிலும் கேரள அரசு காவிரிப் படுகையில், எந்த ஒரு புதிய திட்டங்களையும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன்.

பவானி ஆற்றை நம்பி இருக்கும் நமது விவசாயப் பெருமக்களின் உரிமையை பாதுகாக்க, மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த அரசு எப்போதும் விவசாயிகளின் பக்கம்தான் இருப்பதோடு, அவர்களுக்கு அரணாகவும் விளங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ், தமிழர் என்று சொன்னவர்களெல்லாம் எதையும் செய்யவில்லை. சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பார்கள். அவர்கள் இதுவரை சொல்லிக் கொள்ளும்படியாக எதையாவது செய்திருக்கிறார்களா? என்றால் அதுதான் இல்லை. இதனால் தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் பல தொல்லைகள் தான் விளைந்தன.

இலட்சக்கணக்கான தொண்டர்கள் வாழ்த்தொலிக்க
கோடிக்கணக்கான நல்லிதயங்கள் பாராட்டிசைக்க
மெலிந்தவர் – நலிந்தவர் மகிழ,
சிறந்தவர்–சிந்தனையாளர் புகழ,
முத்தமிழின் சுவையாக –
முழுநிலவின் அழகாக–
மாண்புமிகு அம்மா அவர்கள்
தமிழகத்தின் முதலமைச்சராக
ஆட்சிப் பொறுப்பேற்றார்கள்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வாக்குப் புரட்சியின் வாயிலாகப் பெற்ற பெரு வெற்றியின் மூலம் அனைத்துப் பிரிவு மக்களின் வாழ்வில் ஏற்றம் தர, தமிழக முதலமைச்சராக மக்களுக்கு தொண்டு செய்யும் தமது பணியைத் தொடர்ந்தார்கள்.

தேர்தல் நேரத்தில் வாக்காளர் நன்மதிப்பைப் பெற்றிட அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகள் வெளியிடுவது வழக்கம். ஆனால் மக்கள் நம்பிக்கையைப் பெற்று ஆட்சிக்கு வந்ததும், கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, தங்கள் குடும்ப நலனுக்கு மட்டுமே பாடுபடுவதைக் கண்கூடாகக் கண்டோம். ஆனால், அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக, தனது தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு விரைவாக சென்றடைவதை உறுதிப்படுத்தியது நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் புனிதமானவை; அவற்றை நிறைவேற்றுவது எனது தலையாய கடமை – என்று செயல்பட்டவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். ஆகவே, தம்முடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்த அத்தனை வாக்குறுதிகளையும் காலத்தோடு நிறைவேற்ற உறுதி பூண்டார்கள். அந்த உறுதியினை, அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசும் கட்டாயம் கடைபிடித்து, தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

உளப்பூர்வமான ஊக்கம்
விரைவான செயல்பாடு
வெளிப்படையான நிர்வாகம்–
இதுவே ஆற்றல்மிகு
மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிமுறை.

மாண்புமிகு அம்மாவின் வழியில்
மக்கள் நலனுக்காக–
**தமிழக அரசின் கதவுகள்**
**தட்டாமலேயே திறக்கும்!**
**தமிழக அரசின் கரங்கள்**
**கேளாமலேயே கொடுக்கும்!**

மாண்புமிகு அம்மா அவர்கள் வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களுக்கு கையெழுத்திட்டதைப் போலவே, மாண்புமிகு அம்மா வழியில் வந்த இந்த அரசு பொறுப்பேற்ற முதல்நாளே மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களை ஈடேற்றும் வகையில் 5 திட்டங்களில் கையெழுத்திட்டு, இது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை நிரூபித்துள்ளோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தர ஏராளமான திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கி அதை செயல்படுத்தி

தமிழ்நாட்டை ஒரு வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து அவர்கள்வழியில் வந்த இந்த அரசும் ஏழை எளிய மக்களை, உழைப்பாளர் பெருமக்களை மையமாக வைத்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

**“எதிர்க்கட்சி என்றால் அரசின் கொள்கைகளை திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்ற பொருள் இல்லை. அரசுத் திட்டங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவதுதான்எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும்.**” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறினார்கள்.

**எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால் தான், அந்தக் கருத்துகளை சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மை யோருக்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இயலும்**” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

எதிர்க்கட்சி பற்றிய இலக்கணத்தை தெளிவாக எடுத்துரைத்தார். அந்த வாக்கையே வேத வாக்காக கொண்டு செயல்படும் எதிர்க்கட்சிகளையே மக்கள் மதிப்பார்கள். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது ஒன்றையே நோக்கமாக கொண்டு அரசியல் நடத்துவது மக்கள் விரோதச் செயலாகும். ஆளுங்கட்சி மீது அவதூறு பேசுவதுதான் எதிர்க்கட்சியின் பணி என்று நினைத்துக் கொண்டு செயல்படுபவர்களை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தாங்கள் இல்லையென்றால் நாடே இயங்காது என்று பலர் மக்களிடையே ஒரு மாயையை உருவாக்கி வருகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ள... இங்கே அம்மா சொன்ன ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.

ஓர் ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அதற்கு ஒரே இலட்சியம்! போகும் பாதையில் இருக்கும் அத்தனை வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்; அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்க வேண்டும்; மக்கள் வயிறார உண்டு பசியாற

வேண்டும்; எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, அத்தனை பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்; எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்துவிட வேண்டும் – இதுதான் அந்த நதியின் இலட்சியம்! அப்படிப் போய்க் கொண்டிருந்தது அந்த ஆறு! அப்போது, கரையோரம் அடித்த காற்றில், ஆற்றிலே ஒரு துரும்பு வந்து விழுந்தது.

அது அற்பமான துரும்பு தான்! அதற்கு ஆணவம் அதிகம்! வாயாடித்தனமோ மிகவும் அதிகம்!

எந்தக் காற்று தன்னைத் தள்ளிக் கொண்டு ஆற்றில் போட்டதோ, அந்தக் காற்றிடம் அந்தத் துரும்பு சொன்னதாம்! என்னைப்பார்! இந்த ஆற்றை ஓட விடாமல், நான் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில், என்ன நடக்கிறது பார்! ஆற்றை அப்படியே நிறுத்திவிடப் போகிறேன். ஆறு என்னைப் பார்த்து கெஞ்சப் போகிறது. நான் இதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன். ஓர் அங்குலம் கூட நகரமுடியாமல், நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்" என்றது.

காற்று கைகொட்டிச் சிரித்தது, "என்ன சிரிக்கிறாய்? என்று ஆத்திரத்தோடு கேட்டது துரும்பு.

இந்த துரும்பின் அகங்காரப் பேச்சுக்கு, காற்று பதில் சொல்ல விரும்பவில்லை.

துரும்புக்கு ஆணவம் இன்னும் தலைக்கு ஏறியது, "காற்றே! நான் நினைத்தால், உன்னையும் நிறுத்திவிடுவேன் தெரியுமா?" என்று கொக்கரித்தது.

அதே சமயம், ஆற்றில் ஒரு சுழல் ஏற்பட்டது. ஆணவத் துரும்பு, அந்தச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு, படாதபாடு பட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்து விட்டது. அந்தத் துரும்பு எங்கே போயிற்று என்று யாரும் கவலைப்படவில்லை. ஆறோ, தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது. அப்படி ஒரு சம்பவம் நடந்ததையே அது கவனிக்கவில்லை. அந்த நதியைப்போல வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அம்மாவின் ஆட்சிக்கு, தமிழ்நாட்டை

வளமாக்கும் பணிதான் முக்கியம் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்த அரசு மக்கள் அரசு!**
**இந்த அரசு அம்மாவின் அரசு!**
**விவேகத்துடன் விரைந்து செயல்படும் அரசு!**
**உங்கள் நியாயமான பொது நல கோரிக்கைகளையே திட்டங்களாக வடிவமைக்கிற அரசு!**

என்பதால் உங்கள் கோரிக்கைகளில் இருந்து உருவானவைகளையே மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110ன்கீழ் அறிவித்த திட்டங்களாகும். இப்போது இங்கே துவக்கி வைக்கப்பட்ட கோவை மண்டலத்திற்கான திட்டங்களில் பல விதி 110ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும்.

அவிநாசி, அன்னூர், திருப்பூர் மற்றும் பல்லடம் ஆகிய வறண்ட பகுதிகளின் மக்களின் நீண்ட கால கோரிக்கையான, அப்பகுதி மக்களுக்கு பயன்பெறும் வகையில் பில்லூர் அணையிலிருந்து அத்திக்கடவு என்ற இடத்தில் வெள்ளக் கால்வாய் அமைப்பதற்கான விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அத்திக்கடவு – அவிநாசி திட்டம் என்று பெயரிடப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியால் இந்த திட்டம் துவங்கப்பட்டது.

அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தின் முக்கிய நோக்கம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 31 பொதுப்பணித்துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 538 குளங்களை நிரப்பி நிலத்தடி நீரை செறிவூட்டுவதாகும்.

அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து மத்திய அரசின் ஒப்புதலை கேட்டுள்ளேன். அத்திட்டம் விரைவில் நிறைவேற்றும் வகையில், முதற்கட்டமாக 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 250 கோடி

ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 140 வருடங்களாக இல்லாத வறட்சி ஏற்பட்டுள்ளது. அதனை போர்கால அடிப்படையில் சரிசெய்யும் பணியினை இந்த அரசு ஏற்றுள்ளது. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நீர்நிலைகளை புனரமைக்க பண்டைய காலத்தில் இருந்த குடிமராமத்து திட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு புத்துயிர் கொடுத்துள்ளது.

இந்த திட்டம் விவசாயக் குழுக்களை வைத்து தொடங்கப் படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் நிலத்தடி நீரை உயர்த்தி வறட்சியை சமாளிக்க தொலைநோக்கு திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தை எப்படி ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கினார்களோ! அதைப்போல, குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகளின் ஒருங்கிணைப்போடு இந்த அரசு ஒரு மக்கள் இயக்கமாக நடத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

முதற்கட்டமாக நடப்பு நிதி ஆண்டில் தமிழ் நாட்டில் 30 மாவட்டங்களில் 1519 குடிமராமத்துப் பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படுகின்றது. இது 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவில் கோவை ஒரு சிறந்த வணிக மையமாக திகழ்கிறது.

இங்கு பெருகிவரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உள்ளார்கள். குறிப்பாக உக்கடம்–சுண்டக்காமுத்தூர் மேம்பாலம், டாக்டர் நஞ்சப்பா சாலை மற்றும் சின்னசாமி சாலை, ஆகியவற்றில் மேம்பாலம், உயர் நடை மேம்பாலம் (sky walk) மூன்று குடிநீர்திட்டங்கள், வீடில்லாத ஏழைகளுக்கு வீடுகள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏராளமான திட்டங்களை கோவைக்கு வழங்கி செயல்படுத்தி இருக்கிறார்கள்.

கோவை மாநகரில் காந்திபுரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க ஏதுவாக 162 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கும் பணிகள்

நடைபெற்று வருகிறது. முதல் அடுக்கு மேம்பாலத்தில் 90 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளது. இரண்டாம் அடுக்கு பொறுத்தவரை 10 சதவீதம் பணி முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல் அடுக்கு பாலம் ஏப்ரல் 2017–ல் முடிவடைந்து போக்குவரத்து பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாம் அடுக்கு டிசம்பர் 2017–ல் முடிவடையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரில் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக நில எடுப்பு மற்றும் பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைக்க 88 கோடியே 61 இலட்சம் ரூபாயும், மேம்பால கட்டுமான பணிக்காக 121 கோடியே 82 இலட்சம் ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவை மாநகர் – அவிநாசி சாலையில், உப்பிலிப்பாளையம் முதல் சின்னியம்பாளையம் – கல்லாப்பட்டி விமான நிலையம் வரை 340 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர் மூலம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு புதிதாக 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கு வட்டச்சாலை அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மேற்குவட்டச் சாலைக்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தென்னை விவசாயம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு தென்னை மரம் இன்றியமையாததாக விளங்குகிறது. தென்னை மரத்திலிருந்து பெறப்படும் புதிய சாறு “நீரா” எனப்படும். இது ஆல்கஹால் இல்லாத இயற்கையான சத்து மிகுந்த ஆரோக்கிய பானம். தென்னையில் இருந்து கிடைக்கும் மற்ற லாபத்தை விட, நீராவும் அதன் உபபொருள்களும் விவசாயிகளுக்கு மிகுந்த லாபத்தையும் பலனையும் அளிக்கக்கூடியது என்பதால்

“நீரா” தயாரிக்க அனுமதிக்க வேண்டுமென்று தென்னை விவசாயிகள் கோரி வருகின்றனர். இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மரியாதைக்குரிய நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதனை என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்து நீரா தயாரிக்க அனுமதி அளிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். அதன் அடிப்படையில், நீரா தயாரிக்க அனுமதி அளிப்பது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தேங்காய் விலை வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்தது. அதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. ஆகவே அம்மா அவர்கள் இந்த விலை வீழ்ச்சியை தடுப்பதற்கு கூட்டுறவுத் துறை மூலமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு இன்றைக்கு அவைகள் எல்லாம் கொள்முதல் செய்யப்பட்டன என்கிற செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது. விசைத்தறி கைத்தறி மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டுதான்

மாண்புமிகு அம்மா அவர்களால் ஈரோடு ஜி.எச். ரவுண்டானா அருகில், ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் மேம்பாலத்திற்கு 20.1.2014 அன்று நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தற்போது 58 கோடியே 54 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி தொடங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் திட்டப்பணிகளை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மின்சாரத்துறை சார்பில் 450 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 துணை மின் நிலையங்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் 354 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,

6496 குடியிருப்புகள் உட்பட 1047 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6626 பணிகள் இன்று துவக்கி வைக்கப்படுகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களில் 5 ஊராட்சிகளில் 88 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 11 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் 20 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை தீவன ஆலை உட்பட 108 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 361 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில், அறிவொளி நகரில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் 19 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 குடியிருப்புகள், பள்ளிக் கல்வித்துறை சார்பில் பல்வேறு பகுதிகளில் 14 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பள்ளி மற்றும் 6 புதிய பள்ளிக் கட்டடங்கள் உட்பட 89 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 815 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில், வருவாய்த்துறை சார்பில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை சார்பில் 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினர் கலாச்சார மையம் உட்பட 67 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 229 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், இன்று கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 1313 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ள 8031 திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

**“அரசு நலத்திட்ட உதவியினைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்”**

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி மக்கள் அனைவரும் இந்த திட்டங்களால் கிடைக்கும் பலனை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**“நமது இலட்சியம் உயர்வானது, நமது பார்வை தெளிவானது, நமது வெற்றி முடிவானது”** என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தோடு தான் இந்தத் திட்டங்களையெல்லாம் அம்மா அரசு தொடங்கி வைத்திருக்கிறது.

இத்திட்டங்களால் பயனடையப்போகும் பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இத்திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்கு உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

இந்த விழாவை இத்தனை சிறப்பாக நடத்துவதற்குக் காரணமாக இருந்த அத்தனை இதயங்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**